### கனமழையின் கடும் பாதிப்பிலிருந்து

# சென்னை வாழ் மக்களைக் காப்பாற்றிய முதல்வர் - துணை முதல்வருக்கு நன்றி!

## தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, அக். 22 - தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (19-10-2024) மாலை 5.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக சட்டத்துறை அலுவலகத்தில் கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டத் துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், என்.மணிராஜ், கே.எம்.தண்டபாணி, சு.ராதாகிருஷ்ணன், பி.ஆர். அருள்மொழி, இரா.தாமரைச்செல்வன், ஜெ.பச்சையப்பன், சூர்யா வெற்றிகொண்டான் - சட்டத் துறை துணைச் செயலாளர்கள் கே. சந்துரு, பெ. ரகு, டாக்டர் சந்திரபோஸ், என்.மருது கணேஷ், எஸ். ராஜா முகமது - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜெ. சரவணன், வீ.கவி கணேசன், சுவை சுரேஷ், தூத்துக்குடி மனோஜ், நாகை தினேஷ், எம்.எஸ்.பி.வீரமணி, மீஞ்சூர் சுரேஷ், மதுரை கலாநிதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-

இக்கூட்டம் தொடங்கியதும், சிறந்த கட்டுரையாளர் - எழுத்தாளருமான முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்று அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர், இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**திராவிட கொள்கைச் செல்வம் முரசொலி செல்வம் மறைவுக்கு இரங்கல்**

திராவிட கொள்கைச் செல்வம் முரசொலி செல்வம் மறைவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் மீது தீராத பற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் பெரும் மரியாதையும் கொண்ட திராவிட இயக்கத்தின் கொள்கைச் செல்வமாக தமது இளம் பருவம் முதல் எவ்விதப் பதவிக்கும் ஆசைப்படாமல் கழகமே உயிர்மூச்சி என்று அடக்குமுறை அராஜக கட்சிகளுக்கு சிறிதளவும் அஞ்சாமல் கலைஞரின் படைக்கலன்களில் ஒருவரகவும் கழகத் தலைவர் முரசாம் முரசொலி நாளிதழின் ஆசிரியராகத் திகழ்ந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க முரசொலி சில நினைவுகள் எனும் ஆவணத்தை இயக்க தோழர்களுக்கு வழங்கிய ஆருயிர் அய்யா முரசொலி செல்வம் திடீர் மறைவு என்பது கழகத் தலைவர் அவர்களின் குடும்பத்திற்கே ஈடு செய்யிலாத பேரிழப்பு என்பதையும் அவரது மறைவால் துயர் உறும் கழகத் தலைவர் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர் அனைவரும் முரசொலி அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட கழகத்தின் கொள்கை மறவர்கள் அனைவருக்கும் கழக சட்டத்துறை தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டு அவரது கொள்கை வழிதடத்தில் தொய்வின்றி தொடர்ந்திட சூளுரை மேற்கொள்வோம்.

மேலும் தி.மு.க. சட்டத் துறையின் சார்பில் முரசொலி செல்வம் அவர்களின் புகழினைப் போற்றும் வகையில் வருகிற 27.10.2024 அன்று மாலை சென்னையில் திருவுருவ படத் திறப்பு விழா நடத்துவதென்றும் தீர்மானிக்க ப் பட்டது.

**கன மழையின் கடும் பாதிப்பிலிருந்து சென்னை வாழ் மக்களைக் காப்பாற்றிய முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோருக்கு நன்றி**

வடகிழக்கு பருவமழை மற்றும் வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக சென்னைக்கு பெரும் ஆபத்து என்று வானிலை ஆய்வு மையத்தால் அறிக்கை வெளியான வேலையில் இருந்து கண்ணும் கருத்துமாக தீவிர ஆலோசனைகளின் முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் அமைச்சர் பெருமக்கள் அரசு துறை அதிகாரிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கழகத் தோழர்களும் கண்ணுறக்கம் பாராமல் இரவு பகலாக கொட்டும் கன மழையிலும் களத்தில் நின்று பொது மக்களுக்கு ஆறுதல் சொல்லியும் உணவுகள் வழங்கியும் கடும் மழையின் பாதிப்பிலிருந்து 24 மணி நேரத்திற்குள் சென்னை வாழ் மக்களை பேராபதிலிருந்து காப்பாற்றியதை தமிழ்நாட்டு மக்கள் வெளிமாநிலங்கள் பாராட்டி மகிழ்வதை கழக சட்டத் துறை பெருமிதம் கொண்டு முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் கழக சட்டத்துறை தமது நெஞ்சம் நிறைந்த நெகிழ்ச்சியுடன் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து கொள்கிறது.

**தமிழ்நாடு துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நியமிக்கப்பட்டதற்கு நன்றியும் - துணை முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டதற்கு பாராட்டும், வாழ்த்தும்**

கடந்த 2019 பாராளுமன்றத் தேர்தலிலும், 2021 சட்ட மன்றத் தேர்தலிலும், 2024 பாராளுமன்றத் தேர்தலிலும் தமிழ் நாடு முழுவதிலும் தேனீயைப் போல் சுற்றி ஓய்வறியாமல் பிரச்சாரம் செய்து திமுகழக கூட்டணி மாபெரும் வெற்றி பெற காரணமாக இருந்தது மட்டுமல்லாமல், திமுகழகத்தை அடுத்த அரை நூற்றாண்டுக்கு வழி நடத்திச் செல்ல இளைஞரணி பட்டாளத்தை மிகச் சிறப்பாக உருவாக்கி இயக்கத்திற்கு வலு சேர்த்து வரும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதல்வர் பொறுப்பு வழங்கிய கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும், துணை முதல்வராக பொறுப்பேற்றுள்ள சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

**சட்டத்துறை புதிய நிர்வாகிகளை நியமித்ததற்கு நன்றி**

திமுகழகத்தின் சட்டத் துறை மாநில நிர்வாகிகளாக தேர்வு செய்து இயக்கப் பணியாற்ற வாய்ப்பு கொடுத்த கழகத் தலைவர் அவர்களுக்கும் - இளைஞரணி மாநிலச் செயலாளர் துணை முதல்வர் அவர்களுக்கும் தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும் இக்கூட்டம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**கன மழையிலும் அரசியல் ஆதாயம் தேடும் எடப்பாடி பழனிச்சாமிக்கு கண்டனம்!**

சமீபத்தில் பெய்த மிக கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை திராவிட மாடல் அரசும் மற்றும் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களும் துணை முதல்வர் அவர்களும் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாகவும் கொட்டும் மழையிலும் சென்னை நகரின் பல்வேறு இடங்களில் சுற்றி வந்து ஆய்வு செய்து சில மணி நேரங்களிலே வெள்ள நீர் வழிந்தோட எடுத்த நடவடிக்கைகளை பொது மக்கள் அனைவரும் பாராட்டி வருவதை சற்றும் பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பொய் பிரச்சாரம் செய்து வருவதை மக்கள் ஒரு போதும் ஏற்கமாட்டார்கள். கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் 2015 மற்றும் 2018, 2019 ஆகிய காலங்களில் ஏற்பட்ட புயல் மழை பேரிடர் காலத்தில் அதிமுக அரசின் செயல்பாடற்ற தன்மையால் சென்னை மாநகர மக்கள் தங்கள் வீடு மற்றும் உடைமைகளை இழந்து எவ்வாறு தவித்தார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும். ஆனால், அப்போதைய பேரிடர் காலத்தில் மட்டுமல்லாமல் கொரோனா தொற்று காலத்தின் போதும் திமுகழகம் எதிர்ப்பு அரசியல் செய்யாமல் மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்தது. ஆனால் வெறும் கையில் முழம் போடும் எடப்பாடி பழனிச்சாமி வெள்ளம் பாதித்த பகுதிகளை எட்டிக் கூட பார்க்காமல் ஏசி அறையில் உட்கார்ந்து கொண்டு யாரோ எழுதிக் கொடுத்ததை அறிக்கையாக விட்டு அரசியல் ஆதாயம் தேட முனைவதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை சிறப்பாக கொண்டாட முடிவு**

வருகின்ற நவம்பர்-27 அன்று இளைஞர் எழுச்சி நாளான துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி திமுகழகத்தின் சட்டத்துறை சார்பில் அனைத்து நீதிமன்ற வாயில்களில் கேக் வெட்டி இனிப்பு மற்றும் நலத் திட்டங்கள் வழங்கி கொண்டாடுவதெனவும் மற்றும் கருத்தரங்கங்கள், இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வழங்கியும் நடத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

**தமிழ்த்தாய் வாழ்த்தை அவமரியாதை செய்த ஆளுநர் ஆர்.என். ரவிக்கு கண்டனம்**

திமுகழகம் ஆட்சி பொறுப்பேற்றது முதல் ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துவருவதோடு மட்டுமல்லாமல் தமிழ் நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களின் மூலம் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு பல்வேறு முட்டுக் கட்டுக்களையும் ஒன்றிய அரசு செய்து வருகிறது. குறிப்பாக தமிழ் மொழியை திராவிட கலாச்சாரத்தை அழித்தொழிக்க ஆளுநர் ஆர்.என். ரவி ஒன்றிய அரசின் கைபாவையாக செயல்பட்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக சென்னை டிடி தமிழ் சேனலின் சார்பில் நடைபெற்ற இந்தி வார நிறைவு விழாவில் ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களின் முன்னிலையில் பாடப் பட்ட தமிழ்த்தாய் வாழ்த்தில் வேண்டுமென்றே திட்டமிட்டு “தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்” என்ற வரிகளை தவிர்த்து பாடச் செய்து அதைக் கேட்டு ரசித்த தமிழ் நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களின் குரூர மனப்பான்மையையும் தமிழ்த் தாய் வாழ்த்தை அவமரியாதை செய்ததையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும் பொதிகை என்று அழகான தமிழ் பெயரில் இருந்த தமிழ் சேனலை தூர்தர்ஷன் தமிழ் என்று பெயர் மாற்றம் செய்த ஒன்றிய அரசையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### உலகில் ஒரு முறையாவது பார்க்க வேண்டிய இடம்

# இந்தியா சார்பில் இடம்பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு!

## ‘நியூயார்க் டைம்ஸ்’ பத்திரிகை பட்டியலை வெளியிட்டு பெருமிதம்!




‘நியூயார்க் டைம்ஸ்’ பத்திரிக்கை வெளியிட்ட உலகில் ஒருமுறையாவது பார்க்கவேண்டிய இடங்களின் பட்டியலில் தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது... இந்தியா சார்பில் இடம் பெற்றுள்ள ஒரே மாநிலம் நம் தமிழ்நாடுதான்.

உலகம் மிகப்பெரியது, இதில் உள்ள இடங்கள் அனைத்தையும் ஒருவரால் ஒருவருடத்தில் சுற்றி பார்ப்பது என்பது கடினமான விஷயம்.

இந்நிலையில் இந்த வருடம் உலகில் ஒருமுறையாவது பார்க்க வேண்டிய 52 இடங்களின் பட்டியலை நியூயார்க் டைம்ஸ் வெளியிட்டுள்ளது.

இதில் இந்தியா சார்பில் இடம்பெற்றுள்ள ஒரே ஒரு இடம் தமிழ்நாடு தான். உலகின் முக்கிய இடங்கள் பட்டியலில் தமிழ்நாடு 24வது இடத்தை பிடித்ததற்கு காரணம், இங்குள்ள கலாச்சாரம் மற்றும் இங்குள்ள மக்களின் பண்பாட்டை வளர்க்கும் கட்டட அமைப்புகளும் தானாம்.

உலக அரங்கில் இந்திய கலாச்சாரம் பெரிதாக பேசப்படும்போது, அதில் தமிழக கலாச்சாரத்திற்கு கிடைத்திருக்கும் இந்த அடையாளம் மறுக்க முடியாததுதான். தமிழகத்தில் உள்ள கோவில்கள் பழைமை வாய்ந்ததாகவும், கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

மதுரை மீனாட்சியம்மன் கோவில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில், செட்டிநாடு பகுதியில் உள்ள 18ம் நூற்றாண்டின் சிறந்த கட்டடங்கள் என பல பெருமைகளை தாங்கி நிற்கும் தமிழ்நாட்டை, இந்த வருடம் கட்டாயம் பார்க்க வேண்டும் என நியூயார்க் டைம்ஸ் கூறியுள்ளது.

மெட்ரோ நகரங்களில் அழகு வாய்ந்த மெக்சிகோ நகரம், கனாடாவின் பெரியநகரமான டொராண்டோ, பெரிய ஹோட்டல்களுக்கு பெயர் போன துபாய், உணவுகளில் வெரைட்டி காட்டும் துருக்கியின் செஸ்மே, பழமையான நகரமான சீனாவின் ஹாங்சூ போன்ற நகரங்களின் வரிசையில் தமிழ்நாடு 24வது இடத்தை பெற்றுள்ளது.

இதில் உலகின் முன்னணி வரிசையில் உள்ள வாஷிங்டன், பார்சிலோனா, வியட்நாம், கான்சாய், சிட்னி, க்ரீஸ் போன்ற இடங்கள் தமிழகத்தை விட பின்னால் உள்ளது என்பதுதான் தமிழகத்தின் கலாச்சாரத்துக்கு கிடைத்த பெருமையாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தமிழர்களின் கலாச்சாரம் உலக அளவில் கூட தோற்காது என்பதை தான் இந்த பட்டியலும் கூறுகிறது.

---

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

# திருப்பூர் வடக்கு மாநகரம், பாண்டியன் நகர் பகுதி 6வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் வடக்கு மாநகரம், பாண்டியன் நகர் பகுதி, 6வது வட்டச் செயலாளர் சி.கஜேந்திரன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **கே.பி.கோபால்சாமி** (7/199ஏ, பொம்மநாயக்கன்பாளையம், பூலுவபட்டி, திருப்பூர் 641 602.) அவர்கள் 6வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---




நீலகிரி மாவட்டம், மேல் குன்னூர் பகுதியில் இயற்கையை பாதுகாக்கும் மற்றும் போதை இல்லா நீலகிரி விழிப்புணர்வு குறித்து பள்ளி மாணவ – மாணவிகள் பங்கேற்ற 10 கி.மீ ,5 கி.மீ,மற்றும் 3 கிலோ மீட்டர் தூரத்துக்கான மராத்தான் போட்டியை தமிழக அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கொடியசைத்து துவங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் சங்கீதா, காவல்துறை துணை கண்காணிப்பாளர் வேலு பாண்டி., குன்னூர் வட்டாட்சியர் கனி சுந்தரம், நீல்கிரீஸ் ஹாக்கி சங்கத்தினர் மற்றும் பள்ளி மாணவ – மாணவிகள், ஏராளமான பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

---

### கவரப்பேட்டை விபத்து:

# இரயில் விபத்துகள் அடிக்கடி ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சருக்கு – கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



சென்னை, அக்.22–

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி சமீபத்தில் நடைபெற்ற கவரப்பேட்டை இரயில் விபத்து குறித்து ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இரயில் விபத்துக்கள் இனிமேல் நடக்காதவண்ணம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:–

நமது நாட்டில் அடிக்கடி இரயில் விபத்துக்கள் நடப்பது குறித்தும், அவற்றை தடுக்க உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கவும் கூறி நான் தங்களுக்கு கடந்த 05.06.2023, 15.06.2023 மற்றும் 18.06.2024 தேதியிட்ட எனது கடிதங்களில் குறிப்பிட்டுள்ளேன். இருப்பினும் சரியான பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளாததால் தற்போது தமிழ்நாட்டில் கவரப்பேட்டை என்ற இடத்தில் மீண்டும் ஒரு இரயில் விபத்து ஏற்பட்டுள்ளது. இது மிகவும் வருத்தமளிக்கிறது. இனியாவது இரயில்வே பாதுகாப்பில் தனி கவனம் செலுத்திடுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

எனது முந்தைய 13.06.2023 கடிதத்தில் பாதைகள் பராமரிப்பில் மிகவும் பெரிய தோய்வு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு இருந்தேன். இதுகுறித்து இரயில்வே அதிகாரிகளிடம் பேசியதில், இரயில்வே தவறுகளை பராமரிப்பதற்கு தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதையும், இரயில்வே துறையில் உள்ள காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது முக்கிய காரணங்களாக கூறுகின்றனர். எனவே உடனடியாக பராமரிப்பு செலவுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், காலியாக உள்ள தொழிலாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அதே கடிதத்தில், அதற்கு முன்பு நடைபெற்ற இரயில் தடம் புரண்ட விபத்துகளில் யாரும் காயமடையவில்லை என்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துக்கள் தடுக்கப்பட வேண்டும்

இரயில் விபத்துகளில் மக்கள் காயம்பட்ட பிறகு, வீழ்த்திக்கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுவதை விட இப்போதே இரயில்வே நிர்வாகம் தக்க நடவடிக்கைகளை முனைப்புடன் எடுக்க வேண்டும் என கூறியிருந்தேன். நான் குறிப்பிட்டது போலவே தற்போது நடைபெற்றுள்ள கவரப்பேட்டை இரயில் விபத்தில் பலர் காயமுற்றுள்ள. அவல நிலையை நாம் காண்கிறோம்.

தற்போது இரயில்வே துறை கட்டுமானங்களை நவீனப்படுத்தி புதிய இரயில் சேவைகளை வழங்கப்பட்டு வருவதை நாம் எல்லோரும் பாராட்டிக் கொண்டுள்ள வேலையில், அடிக்கடி நடக்கும் இரயில் விபத்துக்கள் இரயில்வே தளவாடங்கள் பாதுகாப்பான நிலையில் உள்ளதா என்றும் கேள்வி நம் மனதில் ஏற்படுவதைத் தடுக்க முடியுமா? ஏற்படும் விபத்துகள் இரயில்வே தளவாடங்களில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு குறைபாடுகளே காரணம் என்று தெரியவந்துள்ளது.

கவரப்பேட்டையில் நடைபெற்றுள்ள விபத்து ஒரிசாவின் பலசூர் நகரில் ஏற்பட்டுள்ள விபத்தைப் போன்றே ஏற்பட்டுள்ளது. அதாவது விரைவு பயணிகள் இரயிலுக்கு பச்சை விளக்கு சிக்னல் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், தண்டவாளங்களில் செல்லும் இரயில் வண்டி மெயின் லைனில் லூப் லைனுக்குச் சென்றுள்ளதால் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இரயில் தண்டவாளங்களில் முறையாக இணைப்பு ஏற்படாததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இரயில்வே தண்டவாளங்களில் இன்டர் லாக்கிங் சிஸ்டம், கம்ப்யூட்டர் மூலம் கண்காணிக்கப்படுகிறது என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இத்தகைய விபத்துகள் ஏற்படுவதற்கு காரணம் கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தப்படும் மென்பொருள் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கலாம் என்று இரயில்வே துறையில் மூத்த அதிகாரிகள் கருதுகின்றனர். இவ்வாறு கம்ப்யூட்டரில் ஏற்படும் குறைபாடு இரயில்வே துறைக்கு உயிரிழப்பையே உண்டாக்கலாம் என்பதை நாம் உணர வேண்டும்.

சமீபத்தில் நடந்த கவரப்பேட்டை இரயில் விபத்தின் போது கூட விபத்து காரணம் நாச வேலை என்றும் சிக்னல் கோளாறு என்றும் பல செய்திகள் சொல்லப்பட்டன. இதனால் இரயில்வே தொழிலாளர்களின் மீது ஆதாரமில்லாமல் குற்றங்கள் சொல்வதைத் தடுக்க வேண்டும். முறையாக விசாரணை செய்து விசாரணை அறிக்கை பெறப்படும் வரை இது போன்ற குற்றச்சாட்டுகளை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இரயில்வே தொழிலாளர்களின் பெயருக்கு இதனால் இழுக்கு ஏற்படுகிறது. எனவே விபத்துகளை தடுக்க தங்களிடம் நான் கூறிக்கொள்வது யாதெனில் உடனடியாக இரயில்வே தளவாடங்கள் பராமரிப்பு, சிக்னல் போன்ற உபகரணங்கள் சரியான முறையில் பராமரித்து, போதுமான நிதி ஒதுக்குதல், தொழிலாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளவற்றை உடனடியாக நிரப்புதல் போன்ற நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

மேலும் இரயில்வே அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்களின் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் அனைவரிடமும் கலந்தாலோசிக்கும் முறையை கையாள்வது நலம் பயக்கும் என கருதுகிறேன். விபத்துகளை குறைக்க, தலைமை அதிகாரிகள் எடுக்கும் முடிவுகளை நடைமுறைப் படுத்துவதை விட, அனைவரிடமும் கலந்தாலோசித்து திட்டங்களை உருவாக்க வேண்டும்.

அடுத்து, வந்தே பாரத் போன்ற இரயில் திட்டங்கள் இரயில்வே துறைக்கு பெருமை சேர்க்கின்றன என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இரயில்வே துறை இயக்கும் இரயில்களில் வந்தே பாரத் இரயில்கள் 0.5 சதவீத அளவே ஆகும். ஆனால் இரயில்வே துறை நாடு முழுவதும் 13,000 இரயில்களை இயக்குகின்றன. 99.99 சதவீதம் பயணிகள் வழக்கமாக இரயில்வே துறை இயக்கும் இதர இரயில்களை பயன்படுத்துகின்றனர் என்பதை நினைவில் கொண்டு இந்த இரயில் சேவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரயில்வே துறை எனது கருத்துக்களை பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கத் தேவையான ஆணைகளை வழங்கிட வேண்டுகிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

---



விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் சுந்தர் திருமண விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்ட மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, கல்பட்டு வி.இராஜா, நகர பொருளாளர், இளங்கோ, தொ.மு.ச நிர்வாக பணியாளர்கள் சங்க பொதுச்செயலாளர் வாலிபால் மணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாலாஜி, மாவட்ட தொண்டர் அணி தலைவர் அருள்மொழி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி கணேசன், விஜயசங்கர், பேரூராட்சி மன்ற உறுப்பினர் வீரவேல், ஒன்றிய இளைஞர் அணி புஷ்பராஜ், அசோக், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி கபிலன், பிச்சை முத்து உடனிருந்தனர்.